RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 10 | ஜனவரி.15 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பொங்கட்டும் மகிழ்ச்சி : பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின், தலைவர்கள் பொங்கல் வாழ்த்து

புதுடெல்லி: ஜன.15-

"தமிழ் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. அது இந்திய கலாச்சாரத்துடன் இணைந்தது" என்று டெல்லியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

மத்திய இணை அமைச்சர் எல். முருகனின் டெல்லி வீட்டில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில், பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தமிழத்தின் பாரம்பரிய முறைப்படி, பானையில் பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டது. பானையில் பால் ஊற்றி பிரதமர் மோடி வழிபட்டார்.

இதனையடுத்து, மாடுகளுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, உணவளித்த பிரதமர், கால்நடைகளுக்கு நன்றி தெரிவித்தார். இந்த கொண்டாட்டத்தில், எல்.முருகன் மற்றும் அவரது குடும்பத்தினரும், பாஜக அமைப்புச் செயலாளர் பி.எல். சந்தோஷ், தமிழக பாஜக முன்னாள் தலைவர்கள் தமிழிசை சவுந்தரராஜன், அண்ணாமலை, பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்ட கட்சியினர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த நிகழ்வில் அண்மையில் வெளியான 'பராசக்தி' படத்தில் நடித்த நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அப்படத்தின் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய பிரதமர் மோடி,"தமிழ் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. அது இந்திய தேசத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம். உண்மையில் அது முழு மனிதகுலத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம். ஒரே பாரதம்; உன்னத பாரதம் என்ற உணர்வை மேலும் வலுப்படுத்தக் கூடியதாக பொங்கல் போன்ற பண்டிகைகள் உள்ளன.

பொங்கல் இன்று உலகளாவிய பண்டிகையாக மாறியுள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தினரும், தமிழ் கலாச்சாரத்தைப் போற்றுபவர்களும் இதை மிகுந்த உற்சாகத்துடன்



கொண்டாடுகிறார்கள். நானும் அவர்களில் ஒருவன்.

இந்த சிறப்புமிக்க பண்டிகையை உங்கள் அனைவருடனும் கொண்டாடுவதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். நமது வாழ்வில் பொங்கல் ஒரு இனிமையான அனுபவம் போன்றது. இது நமக்கு உணவை வழங்கும் விவசாயிகளின் கடின உழைப்பை பிரதிபலிக்கிறது, பூமிக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கிறது. அதேநேரத்தில், இந்த திருவிழா இயற்கை, குடும்பம், சமூகம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்கான வழியை நமக்குக் காட்டுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படும் லோஹ்ரி, மகர சங்கராந்தி, மாக் பிஹு போன்ற பண்டிகைகளாலும் தற்போது நாட்டில் உற்சாகம் நிலவுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் வாழும் அனைத்து தமிழ் சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்தார்.

இவ்விழாவில், நாட்டியம், இசை உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பொங்கட்டும் மகிழ்ச்சி ; வெல்லட்டும் தமிழகம் என திமுக தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்

அவரது அறிக்கை : தை முதல்நாள் தமிழர் வாழ்வில் சிறப்புமிக்க நாள் . இல்லங்களிலும் உள்ளங்களிலும் இன்பம் பொங்கிடும் பொங்கல் விழா தொடங்குகிற நன்னாள் . உழைப்பைப் போற்றுகின்ற திருநாள் . தமிழ்ப் பண்பாட்டை உலகம் அறிந்திடும் வகையில் மகிழ்ச்சியான கலை , பண்பாட்டு நிகழ்வுகளும் பாரம்பரியமிக்க விளையாட்டுப் போட்டிகளுமாகக் கொண்டாடப்படுகிற நாள்

அந்த மகிழ்ச்சி இந்த ஆண்டில் , இன்னும் கூடுதலாக இருப்பதை தமிழகம் முழுவதும் காண முடிகிறது . இயற்கை சீற்றங்கள் ஏற்பட்ட போதும் , விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் துணையாகவும் அரணாகவும் நின்றது திராவிட மாடல் அரசு

முன்னணி மாநிலம் . பொங்கல் திருநாள் என்பது தமிழர்கள் அனைவருக்குமான திருவிழா . அதில் சாதி பேதம் கிடையாது . மத வேறுபாடுகள் கிடையாது . ஏழை , பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு கிடையாது . பெண் , ஆண் என்ற பாகுபாடு கிடையாது . எல்லாருக்குமான திருநாள் பொங்கல் . ஆட்சிப் பொறுப்பேற்றபோது கொரோனா இரண்டாவது பேரலையின் கடுமையான தாக்கம் , அதனைத் தொடர்ந்து நிரந்தரக் கொரோனா போல தாக்கிக் கொண்டே இருக்கும் மத்திய பாஜ அரசின் தமிழகத்தின் மீதான வஞ்சகம் , அவ்வப்போது எதிர்கொண்ட இயற்கைப் பேரிடர்கள் என எல்லாவற்றையும் கடந்து , தமிழகம் இன்று பல்வேறு இலக்குகளில் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது . அதை மத்திய அரசின் துறைகள் வெளியிடும் புள்ளிவிவரங்களும் தரவரிசைகளுமே உறுதிப்படுத்துகின்றன

மகிழ்ச்சி . ஒன்று கோடியே முப்பது லட்சம் குடும்பத் தலைவியருக்கு மகளிர் உரிமைத் திட்டத்தின் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாயும் , இரண்டு கோடியே இருபத்து மூன்று லட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு மூன்று ரூபாய் ரொக்கத்துடனான பொங்கல் பரிசுத் தொகுப்பும் வழங்கப்பட்டு உள்ளது . தமிழகத்தின் பத்தாண்டுகால இருளை விரட்டி , விடியலைக் கொண்டு வந்த திராவிட மாடல் ஆட்சி அமைவதற்கு ஓயாது பாடுபட்ட கட்சியினர் மனதிலும் மகிழ்ச்சி பொங்க வேண்டும் . தை முதல் நாளில் , தமிழர்களின் இல்லங்கள்தோறும் மகிழ்ச்சி பொங்கட்டும் . அந்த மகிழ்ச்சி நம் அனைவருக்கும் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் வழங்கட்டும் . சூரியனைப் போற்றும் பொங்கல் நன்னாள் , உடன்பிறப்புகளின் உழைப்பினால் கழகத்திற்கு வெற்றிப் பொங்கலாக அமையட்டும் . பொங்கட்டும் மகிழ்ச்சி . தமிழகம் வெல்லட்டும் . இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில், தமிழக மக்கள் அனைவரும் எல்லா நலமும், வளமும் பெற்று சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.








# பொங்கலை முன்னிட்டு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாட்டில்

## 5000க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள், கரும்பு, காலண்டர் வழங்கினார்

பல்லாவரம் ஜன 15

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் தனியார் திருமண மண்டபத்தில் திராவிட பொங்கலை முன்னிட்டு பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்எல்ஏ அவர்களின் ஏற்பாட்டில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்துகொண்டு பல்லாவரம் வடக்கு, பல்லாவரம் தெற்கு, செம்பாக்கம் வடக்கு பகுதி 5000க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள், கரும்பு, காலண்டர், ஆகியவற்றை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவரும் பகுதி கழக செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பகுதி கழக செயலாளர்கள் இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மகளிர் அணி மாணவர் அணி கழக மூத்த முன்னோடிகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# மார்கழி நிறைவு நாளில் 150 குழந்தைகள் கிருஷ்ணர் ஆண்டாள் வேடம் அணிந்து ஹரே ராமா ஹரே கிருஷ்ணா ஹரே ராமா ஹரே என பகவானை வேண்டி நான்கு மாட வீதி உலா நடைபெற்றது

சென்னை ஜன 15-

மார்கழி நிறைவு நாளான 14.1.2026 புதன்கிழமை காலை 6 மணி முதல் 7 15 மணி வரை சென்னை மேற்கு மாம்பலம் ஆரிய கவுடா சாலை அயோத்தியா மண்டபத்தில் இருந்து நான்கு மாட வீதிகளில் சுமார் 150 குழந்தைகள் கிருஷ்ணர் ஆண்டாள் வேடமனிந்து ஹரே ராமா ஹரே கிருஷ்ணா ஹரே ராமா ஹரே கிருஷ்ணா பகவானை வேண்டி பஜனை பாடல் பாடி வீதி உலா நடைபெற்றது. மேலும் இந்த வைபவம் பகவன் நாம பிரச்சார மண்டலினி, ஸ்ரீ ஸ்ரீவாஞ் சியம் சாரிடேபிள் டிரஸ்ட் மற்றும் ஸ்ரீராம் சமாஜ் சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேலும்



அதனைத் தொடர்ந்து செய்தியாளரை சந்தித்த பொருளாளர் விஸ்வநாதன் அவர்கள் கூறியது மாதத்தில் சிறந்த மாதமான மார்கழி மாதம் இந்த மாதத்தில் பகவான் கிருஷ்ணர் பெருமான் ஆண்டாளை வணங்கி நாம் அனைவரும் இந்த நாளை சுபிட்சமாக வணங்க வேண்டும் மார்கழி கடைசி நாளான இன்று சுமார் 150 குழந்தைகள் கலந்து கொண்டு பகவான் கிருஷ்ணர் ஆண்டாள் வேடம அணிந்து அயோத்தியா மண்டபம் நான்கு மாட வீதியில் பஜனை பாடல் பாடிக்கொண்டு வளம் வந்தனர் தொடர்ந்து சிறு குழந்தைகள் இருந்து ஆண்டவனை பிரார்த்தனை செய்து அவர் பல நல்ல விஷயங்களை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு இந்த நாள் நமக்கு பொன்னான நாளாக மார்கழி மாதம் அமைந்துள்ளது. ஆண்டவன் கிருஷ்ணன் அருளால் ஆண்டாள் அருளால் குருமார்கள் அருளால் நாம் அனைவரும் பகவானை வணங்கி நாம் எப்போதும் அதனை பின்பற்ற வேண்டும். நம்முடைய முன்னோர்கள் கற்று கொடுத்ததை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும் பகவானுடைய அனுகிரகம் நமக்கு எப்போதும் நன்மையே உண்டாக்கும் என தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து கலந்து கொண்ட 150 குழந்தைகளுக்கும் ஸ்கூல் பேக், டிபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில், பிரசாதம் வழங்கி குழந்தைகளை கௌரவத்தினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் நிழிறிவி சார்பில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மேனேஜிங் டிரஸ்ட் திரு சுவாமிநாதன், திரு கடலூர் ஸ்ரீ கோபி பாகவதர், செயலாளர் திரு சங்கர், பொருளாளர் திரு விஸ்வநாதன் மற்றும் குழு உறுப்பினர்கள் ஸ்ரீராம் மற்றும் ஸ்ரீ வாஞ் சியம் முரளி பாகவதர், ஸ்ரீ டி எஸ் ராஜகோபால், ஸ்ரீ சங்கரன் மற்றும் ஸ்ரீராம் சமாஜ் தலைவர் மற்றும் செயலாளர் திரு ராமன் ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மிக சிறப்பான முறையில் ஏற்பாடு செய்தனர். மேலும் இந்த நிகழ்வில் டிரஸ்டின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் பெற்றோர்கள் என 300 க்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# தேனி மாவட்ட காவல்துறை மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் இணைந்து நடத்திய 2026 சமத்துவ பொங்கல் விழா

தேனி ஜன. 15-

தேனி மாவட்டத்தில் வருகிற பொங்கல் திருநாளை முன்னிட்டு தேனி மாவட்ட காவல்துறை மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் இணைந்து மாவட்ட காவல் அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தேனி மாவட்ட காவல் உயர் அதிகாரிகள், காவல்துறையினர் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்துகொண்டு பொங்கல் வைத்து விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது வெற்றி பெற்ற நபர்களுக்கு தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பரிசுகளை வழங்கி அனைவருக்கும் தனது பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.



# அமைச்சர் சக்கரபாணி முன்னிலையில் கிருஷ்ணகிரியில் மாற்று கட்சியினர் 1000 பேர் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி ஜன 15-

கிருஷ்ணகிரி மாவட்டம் கிழக்கு மாவட்ட அளவில் நடத்திய, திராவிட பொங்கல் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, காவேரிப்பட்டிணம் மேற்கு ஒன்றியம் சேர்ந்த

சமூக சேவகர் சங்கர் தருமன் ஏற்பாட்டில்,பல்வேறு மாற்றுகட்சிகளை சேர்ந்த, 1,000 பேர் தி.மு.க,வில் இணையும் நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன்,விலிகி தலைமையில்,தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். தி.மு.க., ஆட்சிப்பொறுப்பேற்று பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. குறிப்பாக பெண்களுக்கு புதுமைப்பெண், விடியல் பயணம், மகளிர் உரிமைத்தொகை வழங்கியுள்ளது. தற்போது ரேஷன் கார்டு தாரர்களுக்கு, பொங்கல் தொகுப்புடன், 3,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு போட்டி தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள், நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்றவர்களாக உள்ளனர். அதே பாணியில் தற்போது கட்சியில் சேர்ந்துள்ள, திரு.சங்கர் தருமன் அவர்கள் வெளி மாநிலங்களில் தொழில் செய்தாலும், தி.மு.க.,வில் தன்னை இணைத்து கொண்டு, 1,000 பேரை கட்சியில் சேர்த்துள்ளார். அரசு தேர்தல் நேரத்தில் சொல்லிய திட்டங்கங்களுடன் சொல்லாத பல புதிய திட்டங்களையும் செய்துள்ளது.நமது கழக அரசு.வரும், 20 ல், தமிழக சட்டசபை கூடுகிறது. அப்போது மேலும் பல சலுகைகளை தமிழக முதல்வர் அறிவிப்பார். நாம் அனைவரும் ஒன்றிணைந்து வரும், 2026ல் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் தி.மு.க.,வை, 7வது முறையாக ஆட்சியில் அமர வைக்க பாடுபட வேண்டும் என உரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே வி எஸ் சீனிவாசன், அன்பரசு ஆகியோர் தலைமையில் காவேரிப்பட்டணம் மற்றும் கிருஷ்ணகிரியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், அறிஞர், ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், திமுக நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன்,மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, காவேரிப்பட்டனம் நகர செயலாளர் சாஜித், முன்னாள் நகர செயலாளர் பாபு மற்றும்

மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய ,நகர ,பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வாசன் கண் மருத்துவமனை சார்பில் ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

வேலூர் ஜன 15-

வேலூர் மாவட்டம் அண்ணா சாலையில் அமைந்துள்ள வாசன் கண் மருத்துவமனையின் மருத்துவர்கள் சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு, வாசன் கண் மருத்துவமனை சார்பில் ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் கண் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சௌந்தர்ராஜன்,ஆர்டிஓ வேலூர், ராஜ்குமார், ஆர்டிஓ இன்ஸ்பெக்டர் வேலூர் கன்னியப்பன் டிராபிக் இன்ஸ்பெக்டர் வேலூர் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டோ, டாக்ஸி மற்றும் கனரக வாகன ஓட்டுநர்கள் கலந்து கொண்டு இலவச கண் பரிசோதனையில் பங்கேற்றனர்.

மேலும் இந்நிகழ்வில் வாசன் கண் மருத்துவமனையின் மருத்துவர்கள் டாக்டர் பரூக் டாக்டர் கிருத்திகா, டாக்டர் திவ்யா, டாக்டர் ஸ்ரீஷா ஆகியோர் கலந்து கொண்டு ஓட்டுநர்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

குறிப்பு:சாலை பாதுகாப்பு வார விழாவை சிறப்பிக்கும் விதமாக, ஜனவரி 11 முதல் பிப்ரவரி 11 வரை வாசன் கண் மருத்துவமனையில் அனைத்து ஓட்டுநர்களுக்கும் இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.



■ மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் கலந்துகொண்டு போட்டிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் துவக்கி வைத்தார்.மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் கலந்துகொண்டு போட்டிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில்துவக்கி வைத்தார்.



■ திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா அம்மையநாயக்கனூர் தேர்வுநிலை பேரூராட்சியில் பேரூராட்சி தலைவர் எஸ் பி செல்வராஜ் மற்றும் செயல் அலுவலர் பூங்கொடிமுருகு அவர்கள் தலைமையில் பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது

# சென்னை காயிதே மில்லத் கல்லூரி வளாகத்தில் சமத்துவப் பொங்கல் திருவிழா

மேடவாக்கம் ஜன 15-

சென்னை மேடவாக்கத்தில் உள்ள காயிதே மில்லத் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் மேடையில் 13.01.2026 நாளன்று சமத்துவப் பொங்கல் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வின் தொடக்கமாக கல்லூரி முதல்வர், துணை முதல்வர்கள், கண்காணிப்பாளர் போன்றோர் மாணவர்களுக்கு பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து நிகழ்வை துவக்கி வைத்தனர். அதனை தொடர்ந்து பட்டிமன்றம் நடைபெற்றது. நடுவராக, சென்னை கிறிஸ்தவ



கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறை தலைவர் பால் பிரபு சாந்தராஜ் பங்கேற்றார். அடுத்ததாக தாரை தப்பட்டை, ஒயிலாட்டம், கரகாட்டம், போன்ற நிகழ்வுகள் ஒருபுறம் நிகழ, மறுபுறம் மாணவர்களுக்கான பாரம்பரியமான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன கபடி, கயிறு இழுத்தல் , உறி அடித்தல்.பேராசிரியர்களும் மாணவர்களும் பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர். நிகழ் வின் இறுதியில் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி விழா நிறைவுற்றது.

# கோவை நைட்டிங்கேல் நர்சிங் மற்றும் இயன்முறை மருத்துவ கல்லூரியில் பொங்கல் விழா நடைபெற்றது

கோவை ஜன 15-

கோவை மதுக்கரை பகுதியில் செயல்பட்டு வரும் நைட்டிங்கேல் செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவக் கல்லூரியில் பாரம்பரியமும் கலாச்சாரமும் ஒருங்கிணைந்த பொங்கல் விழா கோலாகலமாக வெகுவிமர்சியாக கொண்டாடப்பட்டது...இந்த சிறப்பு வாய்ந்த பொங்கல் விழாவிற்கு நைட்டிங்கேல் கல்விக் குழுமத்தின் நிர்வாகத் தலைவர் மனோகரன் தலைமை வகித்து விழாவினை துவக்கி வைத்தார்...

கல்லூரி முதல்வர்கள் டாக்டர் ராஜன், டாக்டர் துர்கா மற்றும் டாக்டர்



சகில் ஆகியோர் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று பேசினார்....விழாவின் முக்கிய நிகழ்வாக, கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஒன்றிணைந்து பொங்கல் வைத்து, தமிழர் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில் விழாவை சிறப்பாகக் கொண்டாடினர். அதனைத் தொடர்ந்து மாணவிகளின் நம் தமிழர்களின் பாரம்பரியத்தை போற்றும் வகையில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மற்றும் நடன நிகழ்ச்சிகள், கோலப்போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.... இந்நிகழ்ச்சிகளில் மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்....பின்னர் சமுதாயத்தில் அதிகமாக ஏக்கம் மற்றும் நினைவுகள் நிலவும் தலைமுறைகள் குறித்து விவாதிக்கும் வகையில் “90ஸ் கிட்ஸ், 2கே கிட்ஸ்” என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. இந்த பட்டிமன்றத்தில் பட்டிமன்ற பேச்சாளர் ராமேஸ்வரம் ராமன் கலந்து கொண்டு, இரு தலைமுறைகளின் வாழ்வியல் மாற்றங்கள், சமூக சூழல் மற்றும் நினைவுகளின் முக்கியத்துவம் குறித்து சுவாரஸ்யமாக உரையாற்றினார்.இந்நிகழ்ச்சியில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ராஜீவ், சஞ் செய்மணி, சந்தியா, மீனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். பொங்கல் விழா மாணவர்களிடையே பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தையும், சமூக ஒற்றுமையும் வலியுறுத்தும் வகையில் வெற்றிகரமாக நடைபெற்றது.இதில் ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# உயிரூட்டல் அறக்கட்டளை சார்பில் 5 நாள் இலவச உள்ளகப் பயிலுநர் பயிற்சி மற்றும் "உணவை வீணாக்காதீர்" விழிப்புணர்வு நடைபெற்றது

கிருஷ்ணகிரி ஜன 15-

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் செயல்பட்டு வரும் உயிரூட்டல் அறக்கட்டளை சார்பில், அதியமான் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் இறுதியாண்டு 12 மாணவிகளுக்கு 5 நாள் உள்ளகப் பயிலுநர் (Internship) பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சியின் ஒரு பகுதியாக, 10.01.2026 அன்று சூளகிரி HP Junction பகுதியில், மாணவிகள் இணைந்து "உணவை வீணாக்காதீர்" என்ற சமூக விழிப்புணர்வு பிரச்சாரத்தை பொதுமக்களிடமும் வணிக நிறுவனங்களிடமும் மேற்கொண்டனர். உணவு வீணாக்கத்தைத் தவிர்ப்பது, தேவையான அளவிலேயே உணவு எடுத்துக்கொள்வது, மீதமுள்ள உணவை




தேவையுள்ளவர்களுக்கு வழங்குவது போன்ற மனிதநேய கருத்துகளை மாணவிகள் மக்களிடம் எடுத்துரைத்தனர். மற்றும் ஆதரவற்றோர்க்கு இலவசமாக உணவு வழங்கினர். இந்த 5 நாள் பயிற்சியில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடு, சமூக சேவை, உணவு பாதுகாப்பு, விவசாய வணிகம், களப்பணி அனுபவம் ஆகியவை கற்பிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியின் ஏற்பாடுகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை உயிரூட்டல் அறக்கட்டளை நிறுவனர் மு. சம்பத்குமார் மற்றும் தலைவர் தி.குமார் ஆகியோர் மேற்கொண்டனர். பயிற்சி நிறைவில், மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. சமூக பொறுப்புணர்வை வளர்க்கும் வகையில் இந்த இலவசப் பயிற்சி மற்றும் களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ணகிரியில் சமத்துவ பொங்கல் விழா, தூய்மை பணியாளர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா மதியழகன் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி ஜன 15-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட அலுவலகம் முன்பு சமத்துவ பொங்கல் விழா நேற்று கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் 400 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள்




அஸ்லாம் வேலுமணி மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டிசிஆர் தினேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ்,நாகரசம்பட்டி பேரூராட்சித் தலைவர் தம்பிதுரை, காவேரிப்பட்டினம் நகர செயலாளர் ஜே கே எஸ் சாஜித், தலைமைக் கழக பேச்சாளர் லயோலா ராஜசேகர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்ட கொள்ளையர்களுக்கு 4 ஆண்டு சிறை: தஞ்சாவூர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

தஞ்சாவூர்:, ஜன.15-

தஞ்சாவூரில் பகல் நேரத்தில் வீடு புகுந்து திருடிய வழக்கில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல கொள்ளையர்கள் இருவருக்கு தலா 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சம்பவத்தின் பின்னணி: கடந்த 04.07.2025 அன்று, தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரு வீட்டில் பகல் நேரத்தில் நோட்டமிட்ட கும்பல், வீடு புகுந்து திருடியது.





இது தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில், தீவிர விசாரணை நடத்திய காவல் துறையினர் 21.07.2025 அன்று குற்றவாளிகளைக் கைது செய்தனர். குற்றவாளிகள் விபரம்: கைது செய்யப்பட்டவர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சரித்திர குற்றப்பதிவேடு (History Sheeters) குற்றவாளிகள் ஆவர்: * சுகுமார் (27), த/பெ.சண்முகம், வைரவன்பட்டி, சிவகங்கை. (HS NO.99/14 - A Cat)

* அமர்நாத் (32), த/பெ.செல்வராஜ், சரோஜினி தெரு, சிவகங்கை நகர். (HS No.987/24 - C Cat) இவர்கள் மீது ஏற்கனவே சிவகங்கை மற்றும் பிற மாவட்டங்களில் கொலை மற்றும் கொள்ளை வழக்குகள் நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. நீதிமன்றத் தீர்ப்பு:

இந்த வழக்கின் விசாரணை தஞ்சாவூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணை ஐந்து மாதங்களிலேயே விரைந்து முடிக்கப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்பட்டதால், சுகுமார் மற்றும் அமர்நாத் ஆகிய இருவருக்கும் தலா 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், தலா ரூ.10,000 அபராதமும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். விரைந்து விசாரணை நடத்தி தண்டனை பெற்றுத் தந்த காவல் துறையினரை உயர் அதிகாரிகள் பாராட்டினர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே விபத்தில் கோமா நிலையில் இருந்து மீண்டு வந்த

# டீ கடைக்காரரின் வறுமை. நிலையை பார்த்து காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் எல்.சுப்பிரமணியன் நிதி உதவி வழங்கி வழங்கி உதவினார்

கிருஷ்ணகிரி ஜன.15

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பகுதியை சேர்ந்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் முனுசாமி இவர் சாலையோரம் டீ கடை வைத்து பிழைத்து வருகிறார்,

இந்த நிலையில் கடந்த கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு சாலையை கடந்த முனுசாமி மீது இரு சக்கர வாகனம் மோதியதில் முனுசாமி தூக்கி வீசியதில் பலத்த படுகாயம் அடைந்த முனுசாமி கோமா நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்தார், பின்னர் நீண்ட நாள் சிகிச்சைக்கு பிறகு தீவிர சிகிச்சையின் காரணமாக நினைவு திரும்பிய முனுசாமி வீடு திரும்பபினர்.

இருப்பினும் டீ கடை நடத்த முடியாத காரணத்தால் முனுசாமின் அவரது குடும்பம் வறுமைக்கு தள்ளப்பட்டது,

இது குறித்து தகவல் அறிந்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல்.சுப்பிரமணியன் முனுசாமியின் வீட்டுக்கு முனுசாமியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு, அவருக்கு நிதி உதவி அளித்ததோடு இரண்டு மாதத்திற்கு தேவையான அரிசி பருப்பு உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்.

கடும் வறுமையிலும் தகவல் அறிந்து செய்த உதவியை முனுசாமி குடும்பத்தினர் கண்ணீர் மல்க பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் உமர், முன்னால் மாவட்ட துணை தலைவர் விவேகானந்தன், முன்னால் மாவட்ட துணை தலைவர் சிவலிங்கம், ஊடக பிரவு கணேஷ், ரமேஷ், மடத்தானூர் ஆறுமுகம், முன்னால் மாவட்ட செயலாளர் நவாப், டேனியல் பழனி, உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.





# திருவெறும்பூர் தேவநேரியில் உள்ள துவக்கப்பள்ளியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு சீருடைகள் வழங்கப்பட்டன

திருச்சி, ஜன.15-

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா தேவநேரியில் உள்ள துவக்கப்பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனைப்படி சீருடைகள் வழங்கப்பட்டன இதில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்த்ராஜ் மாநில ஆலோசகர் ராமன் அவர்களின் தலைமையில் சிறப்பு விருந்தினராக புலிவலம் பஞ்சாயத்து தலைவர் விமலா பெருமாள் பள்ளியின் தலைமை ஆசிரியர் தாரணி மோகனாரெய்லீனா அமைப்பின் மகளிர் துணை ஆலோசகர் ஈஸ்வரி மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான் மாநில மகளிர் அணி துணை தலைவர் காந்திமதி திருச்சி மாவட்ட பொருளாளர் கிரிஸ்டி திருச்சி மாவட்ட செயலாளர் சத்யா மற்றும் நந்தினி குழந்தைகள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..





■ வேலூர் மாவட்டம் காட்பாடி கழிஞ்சூர் சர்ச் காலனியில் தெற்கு பகுதி 11வது வட்டத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது தி.மு.க 11 வது வட்ட துணைச் செயலாளர் மைக்கல் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாநகராட்சியின் துணை மேயர் சுனில் குமார் 500க்கு மேற்பட்ட அப்பகுதி மக்களுக்கு சேலை வழங்கி விழாவை சிறப்பித்தனர் சிறப்பு விருந்தினராக ஆல் காட் சர்ச தலைமை போதகர் மேனன் மற்றும் மலைத்துகள் சிவ பர்குணன், சமூக ஆர்வலர் சையத் பாரூக் , கழக பேச்சாளர் கண்ணன் மற்றும் அப்பகுதி மக்கள் கட்சி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



■ திருச்சிராப்பள்ளி, அரசு சட்ட கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இனிகோ இருதயராஜ் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.






# தேவகோட்டை நகராட்சியில் புதிய முயற்சி: மாணவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கும் திட்டம்

தேவகோட்டை ஜன 15-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சியில் பசுமைப் பரப்பளவை அதிகரிக்கவும், கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் மற்றும் இயற்கை உரம் வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.



கழிவு மேலாண்மை மற்றும் உர உற்பத்தி தேவகோட்டை நகராட்சியின் 27 வார்டுகளில் இருந்து நாள்தோறும் சுமார் 18 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. இதில்: * சுமார் 4 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகள் ராம்நகர், சருகனி சாலை மற்றும் புதூர் அக்ரஹாரம் நுண்ணுரச் செயலாக்க மையங்களில் உரமாக்கப்படுகின்றன. * 1 மெட்ரிக் டன் கழிவுகள் மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன. * மறுசுழற்சி செய்ய இயலாத எஞ்சிய 8 மெட்ரிக் டன் கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருளாக அனுப்பப்படுகின்றன. பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் பணிகள் ஏற்கனவே ராம்நகர் நுண்ணுரச் செயலாக்க மையத்தில் 500 மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது புதூர் அக்ரஹாரம் வளாகத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், அங்கு 1,000 மரக்கன்றுகள் கொண்ட நர்சரி (நாற்றுப்பண்ணை) உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான விழிப்புணர்வு மரம் வளர்ப்பின் நன்மைகள் மற்றும் கழிவு மேலாண்மை குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்களுக்கு நகராட்சி சார்பில் இலவச மரக்கன்றுகளுடன் இயற்கை உரமும் வழங்கப்பட உள்ளது. ஆய்வு மற்றும் பங்கேற்பு இந்நிகழ்வில் நகர்மன்றத் தலைவர் கா. சுந்தரலிங்கம் மற்றும் ஆணையாளர் மு. அஜிதா பர்வின் ஆகியோர் மரக்கன்றுகளை நடவு செய்து, புதிய நர்சரியைப் பார்வையிட்டனர். இதில் துப்புரவு அலுவலர் பா. பாண்டிசெல்வம் மற்றும் பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



■ வேலூர் மாவட்டம் காட்பாடி பாரஸ் மஹாலில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்று முன்தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் டி எம். கதிர் ஆனந்த், நிகழ்ச்சியில் வீடு வீடாக சென்று படிவங்களை வழங்கும் இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்களிடம் அடையாள அட்டை மற்றும் படிவங்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் 1 வது மண்டலக்குழுத்தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மகளிர் திட்ட இயக்குநர் எஸ்.பியாலமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட ந.வயிரவன்பட்டியில் சுற்றுலாத்துறை மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பில் நேற்று (14.1.2026) நடைபெற்ற பொங்கல் விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன்,மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் சுற்றுலா அலுவலர் திருவாசன் உட்பட பலர் உள்ளனர்.

# அஇஅதிமுக கே.அசோக்குமார் MLA E.M.P கிருஷ்ணகிரி எம்எல்ஏ அறிக்கை

கிருஷ்ணகிரி, ஜன.15-

தமிழகத்தின் விடி வெள்ளியாக தோன்றி எதிரிகளின் சிம்ம சொப்பனமாக வாழ்ந்து தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வழிவகுத்து தந்து மறைந்த முன்னாள் முதல்வர். கழக நிறுவனத் தலைவர் "பாரத் ரத்னா "இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமசந்திரன் 109 ஆவது பிறந்தநாள் விழா 17.01.2026 சனிக்கிழமையன்று அந்தந்தப் பகுதிகளில் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். திருவுருவச் சிலை மற்றும் படங்களுக்கு மாலை அணிவித்து இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக முன்னாள் முதல்வர், கழக நிறுவனத் தலைவர் "பாரத் ரத்னா இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் 109ஆவது பிறந்தநாள் விழா முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் 18.01.2026 ஞாயிற்றுகிழமை கிருஷ்ணகிரி ரவுண்டான வாசவி கேப் அருகில் மாலை 6.00மணிக்கு நடைபெற உள்ளது. இவ்விழாவில் தலைமை கே.அசோக்குமார் MLA.,Ex-.M.P விழா பேருரை கே.பி.முனுசாமி B.A.B.L.MLA Ex-.MP கழகதுணைப் பொதுசெயலாளர் தலைமைக் கழக பேச்சாளர்கள், ஆரணி PATCV K.அன்பழகன் மற்றும், எம்.சபாபதி ஆகியோர் சிறப்புரை ஆற்றஉள்ளனர். அதுசமயம் கழக. இன்னாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அமைப்பு நிர்வாகிகள், கிளை கழக பொறுப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னாள் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், தகவல் தொழில் நுட்ப நிர்வாகிகள். தொண்டர்கள்,பொதுமக்களும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவ்வரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# சிவகங்கையில் மருத்துவ சேவையில் முத்திரை பதிக்கும் கார்த்திக் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

சிவகங்கை ஜன 15-

சிவகங்கை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி மக்களுக்கு உயர்தர மருத்துவச் சேவையை மலிவு விலையிலும், நவீன தொழில்நுட்பத்துடனும் வழங்கி வருகிறது கார்த்திக் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இந்த மருத்துவமனை, தற்போது அதிநவீன வசதிகளுடன் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. நவீன சிகிச்சை வசதிகள் இந்த மருத்துவமனையில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவம், மனநல சிகிச்சை என அனைத்துத் துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றனர். குறிப்பாக: * லேப்ராஸ்கோப்பி மற்றும் லேசர் சிகிச்சை: அதிநவீன லேப்ராஸ்கோப்பி முறையின் மூலம் ரத்தப்போக்கு இன்றி, மிகக் குறைந்த வலியில் துல்லியமான அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.





* டயாலிசிஸ் மையம்: முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களும் பயன்பெறும் வகையில் சிறந்த முறையில் டயாலிசிஸ் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. * சிடி ஸ்கேன் (CT Scan): 24 மணி நேரமும் இயங்கும் சிடி ஸ்கேன் வசதி உள்ளது. வெறும் 3500/ என்ற சலுகை விலையில் ஸ்கேன் செய்யப்பட்டு, 2 மணி நேரத்திலேயே முடிவுகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மருத்துவக் குழு மற்றும் கிளைகள் மருத்துவர் வி. கார்த்திக்ராஜன் (MBBS., MS-Gen. Surgery) மற்றும் மருத்துவர் ரி. மணிவண்ணன் (MBBS., MD., FCD (Diab)., FCGP) ஆகியோரது தலைமையில் அனுபவம் வாய்ந்த மருத்துவக் குழுவினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். சிவகங்கை மதுரை சாலையில் உள்ள முதன்மை மருத்துவமனை மட்டுமன்றி, காளையார்கோவில் தொண்டி சாலையில் அதிநவீன வசதிகளுடன் கூடிய கிளை மருத்துவமனையும், ஒக்கூர் பகுதியில் சிறிய மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. முக்கிய சிறப்பம்சங்கள்: * அனைத்து விதமான அரசு மற்றும் தனியார் மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் (Insurance) ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.






* 24 மணி நேர அவசரச் சிகிச்சை மற்றும் ஆம்புலன்ஸ் வசதி. * எக்ஸ்ரே, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் ரத்தப் பரிசோதனை மையம். * சிறுநீரக அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை வசதிகள். குறைந்த செலவில் நிறைந்த மருத்துவச் சேவையைத் தருவதால், சிவகங்கை மாவட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற்ற முதன்மை மருத்துவமனையாக இது திகழ்கிறது.

தொடர்புக்கு:04575 241604, 94423 41604, 98425 21153 மதுரை ரோடு, சிவகங்கை.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161